பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
02 07 2026 THURSDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- விளிம்பு நிலை மக்களுக்காக, மாணவர்கள் பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
- இந்தியா - மலேசியா இடையேயான ராணுவ ஒத்துழைப்பு குறித்த கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.
- அமர்நாத் புனித யாத்திரை இன்று தொடங்கியது.
- கேரளத்தின் பெரும்பாலான பகுதிகளில் இன்று மழை பொழிவு குறையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- உலக கோப்பை கால்பந்து போட்டியில் இங்கிலாந்து மற்றும் பெல்ஜியம் அணிகள் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

>>>>>><<<<<<

மாணவர்கள் தங்களது கல்வியறிவை விளிம்பு நிலை மக்களுக்காக பயன்படுத்தி பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திரப்பிரதேசம், அனந்தபுரமுவில் உள்ள மத்தியப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று அவர் உரையாற்றினார்.

பல்கலைக் கழகங்களிலிருந்து மாணவர்கள் அறிவு, தன்னம்பிக்கை, வாய்ப்புகளுக்கான புதிய வழிகளை ஏற்படுத்தும் பட்டத்துடன் வெளியேறுவதாக அவர் கூறினார்.

மாணவர்களின் கடின உழைப்பு வெற்றிக்கு காரணமாக இருந்தாலும், பெற்றோரின் தியாகங்கள், ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள், சமூகத்தின் ஆதரவு ஆகியவை வெற்றிக்கு அடித்தளமாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனால், மாணவர்கள் சமூகத்திற்கு கடமையாற்றும் பொறுப்பு உள்ளதாக அவர் கூறினார்.

ஆந்திரப்பிரதேச மத்திய பல்கலைக் கழகம் திறன் மேம்பாட்டு மையமாக உருவெடுக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில் சிறந்த பங்களிப்பை பல்கலைக் கழகம் வழங்கும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.

>>>>>><<<<<<

தில்லியில் டெங்கு காய்ச்சல் பரவலை தடுப்பது குறித்த உயர்நிலைக் குழுக் கூட்டம் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தலைமையில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய அவர், நோய்ப் பரவல் அதிகரிப்பை முன்கூட்டியே கண்டறிந்து, அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

டெங்கு நோய்த் தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் குடியிருப்போர் நலச் சங்கங்களை அரசு ஈடுபடுத்த வேண்டும் என்று திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

அமர்நாத் புனித யாத்திரை இன்று தொடங்கியது.

ஜம்முவில் பகவதிநகர் முகாமிலிருந்து துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா இன்று காலை முதல் குழுவின் யாத்திரையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

கஷ்மீரின் இரட்டைப் பாதைகளில் 57 நாட்கள் நடைபெறும் யாத்திரை நாளை அதிகாரப்பூர்வமாக தொடங்கி, ஆகஸ்ட் மாதம் 28ஆம் தேதி நிறைவடைகிறது.

இந்த யாத்திரையில் பங்கேற்றுள்ளவர்களுக்கு பல அடுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அமர்நாத் யாத்திரை தொடங்குவதற்கு முன்பாகவே, சுமார் 4 லட்சம் பேர் பதிவு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

இந்தியா - மலேசியா இடையேயான ராணுவ ஒத்துழைப்பு குறித்த கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

இந்திய தரப்பு பாதுகாப்பு அமைச்சக இணைச்செயலாளர் திரு. அமிதாப் பிரசாத்தும், மலேசிய தரப்பில் ராணுவ துணைத்தளபதி மேஜர் ஜென்ரல் அமீர் மஹமூத் பின் அப்துல் ரஹ்மானும் கூட்டாக தலைமை தாங்கினர்.

இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பின் முழு அம்சங்கள் குறித்து அப்போது விவாதிக்கப்பட்டது.

இருநாட்டு ராணுவத்திற்கு இடையேயான பரிமாற்றங்கள், இருதரப்பு பயிற்சிகள், திறன் மேம்பாடு, கடல்சார் ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது

இருநாட்டு ராணுவத்திற்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

>>>>>><<<<<<

கேரளத்தின் பெரும்பாலான பகுதிகளில் இன்று மழை பொழிவு குறையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோழிக்கோடு, கன்னூர், காஸர்கோடு மாவட்டங்களைத் தவிர, கேரளத்தின் பிற மாவட்டங்களில் மழையின் தாக்கும் குறையும் என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த 2 நாட்களாக கன்னூர், காஸர்கோடு மாவட்டங்களில் மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

டிஜிட்டல் கைது இணையவழி மோசடி வழக்கில், ஹரியானாவைச் சேர்ந்த ஒருவரை ராஜ்கோட் சிபிஐ அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

முதியவர் ஒருவரிடமிருந்து 25 லட்சம் ரூபாயை அனுப்புமாறு கட்டாயப்படுத்தி, டிஜிட்டல் கைது அச்சுறுத்தல் விடுத்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து, போலி முதலீட்டுத் திட்டங்கள், ஆள்மாறாட்ட அழைப்புகள், டிஜிட்டல் கைது மோசடிகள் உள்ளிட்ட இணையவழி மோசடிகளுக்கு எதிராக பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு சிபிஐ வலியுறுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் வருவாய் புலனாய்வு இயக்குநரகம் நடத்திய சோதனையின் போது, 9 கிலோ கடத்தல் தங்கமும், எட்டரை கோடி ரூபாய் வெளிநாட்டு கரன்சியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்குவங்கம், பீகார், தில்லி ஆகிய இடங்களில் மூன்று கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டு, 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து நடத்தப்பட்ட விசாரணையில் தில்லியில் சட்டவிரோதமாக தங்க உருக்காலை செயல்படுவதாகவும் கண்டறியப்பட்டது.

பெங்களூரு விமான நிலையத்தில் சுமார் 2 கிலோ தங்கம் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரது இல்லத்தில் நடத்தப்பட்ட சோதனையில் 42 கிலோ வெள்ளி பறிமுதல் செய்யப்பட்டதாக வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

அருணாச்சலப்பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய அமைச்சர்கள் திரு. சிவராஜ் சிங் சௌஹான், திரு. கிரண் ரிஜிஜூ, அம்மாநில முதலமைச்சர் திரு. Pema Khandu ஆகியோர் பார்வையிட்டனர்.

பாதிப்பு குறித்து முழுமையாக ஆய்வு செய்த பின்னர் அதுகுறித்த விரிவான அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இட்டா நகரில் நேற்று நடைபெற்ற உயர்நிலை கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துரிதமாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறும், தேவையான உதவிகளை வழங்குமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

>>>>>><<<<<<

அமெரிக்கா-ஈரான் இடையேயான பேச்சுக்கள் தோஹாவில் நேற்று நிறைவடைந்தது.

ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அலி தமேனியின் இறுதிச் சடங்குகள் இம்மாதம் 9ஆம் தேதி நடைபெற்ற பிறகு, அமெரிக்கா – ஈரான் இடையேயான பேச்சுகள் தொடர்ந்து நடைபெறும் என்று இருதரப்பும் ஒப்புக் கொண்டதாக கத்தார் அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க துணை அதிபர் திரு. J.D. Vance, அமெரிக்கா-ஈரான் இடையேயான பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்று வருவதாக கூறினார்.

>>>>>><<<<<<

வெனிசுலா நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 295-ஆக அதிகரித்துள்ளது.

11 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும், சுமார் 13 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளதாகவும் அந்நாட்டு அதிபர் Jorge Rodriguez தெரிவித்துள்ளார்.

மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

*இதற்கிடையே, கடந்த வாரம் ஏற்பட்ட நிலநடுக்க பாதிப்பு காரணமாக. வெனிசுலாவில் 7 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று வெனிசுலா அதிபர் அறிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*ரஷ்யாவின் மிகப் பெரிய Ufa எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது யுக்ரைன் ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.*

*இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி, ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.*

*ரஷ்யாவின் Penza பகுதியில் ஏவுகணை பாகங்களை தயாரிக்கும் ஆலையையும் யுக்ரைன் ராணுவம் தாக்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*எனினும் இந்த தாக்குதல்களை ரஷ்ய அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை.*

*ரஷ்ய வான்எல்லையில் பறந்த யுக்ரைன் நாட்டுக்குச் சொந்தமான 179 ட்ரோன்களை தங்கள் நாட்டு ராணுவம் தாக்கி அழித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சம் தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*உலக கோப்பை கால்பந்து போட்டியில் இங்கிலாந்து மற்றும் பெல்ஜியம் அணிகள் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.*

*நாக்அவுட் சுற்றில், இங்கிலாந்து அணி 2-1 என்ற கோல்கணக்கில் காங்கோ-வையும், பெல்ஜியம் 3-2 என்ற கோல்கணக்கில் செனகலையும் வென்றன.*

*>>>>>><<<<<<*

*Canada ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Tanya Hemant, Aakarshi Kashyap ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் தன்யா ஹேமந்த் 21-16, 21-18 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Disha-வை வென்றார்.*

*மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் Aakarshi Kashyap, 21-14, 21-12 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Anna Tatranova-வை வென்றார்.*

*>>>>>><<<<<<*